# வாழ்வினை வழங்கிடும் வள்ளலே

வாழ்வினை வழங்கிடும் வள்ளலே - எம்மில்
வாழ்ந்திடவே வருக
அக இருள் அகற்றிடும் அருட்சுடரே
அமைதியை அளித்திட எழுக - ( 2 )
இதயங்கள் திறந்து வைத்தோம் - உம்
உதயமே பார்த்து நின்றோம் - 2
உன்னருள் துணையில் உமதன்பின் நிறைவில்
என் மனம் மகிழ்ந்திட வா

**1)**
வாடிடும் உள்ளங்கள் வளம் பெறவே
வானின்று வந்தவரே
உன் உறவினில் அடியவர் இணைந்திடவே
உணவாய் தருபவரே ( 2 )
உலகின் ஒளியாக எம் வாழ்வின் வழியாக( 2 )
மாந்தர் அனைவரும் உறவின் பாதையில்
மகிழ்ந்தே வாழ்ந்திட வா

**2)**
பேதங்கள் சோகங்கள் மறைந்திடவே
அருள் மொழி அளித்தவரே-பிறர்
துயர்தனில் உதவிட உழைத்திடவே
எம்மை அன்பினில் அழைத்தவரே - 2
உம் அருளினால் திடமடைந்து உம்
பாதையில் வழி நடந்து - 2
அவனியில் அமைதியின் அரசினை அமைத்திட
எம்மை மாற்றிட வா